## மேனிலை இரண்டாம் ஆண்டு

## வணிகவியல்

## மாதிரி வினாத்தாள் -3

**நேரம் : 2.30 மணி** **மதிப்பெண்கள் : 90**

**பகுதி – அ**

**சரியானவிடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** 20 X 1 = 20

1. ஒரு பன்னாட்டு நிறுமம் _________என அழைக்கப்படுகிறது.

அ. உலக அளவில் பெரியது

ஆ. கூட்டாண்மை

இ. கூட்டுறவுச் சங்கங்கள்

ஈ. பொதுக் கூட்டுரு

2. பொதுக்கூட்டுருக்கு எடுத்துக்காட்டு-----------------

அ. ரயில் போக்குவரத்து

ஆ. மாருதி உத்யோக்

இ. தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம்

ஈ. இந்திய ரிசர்வ் வங்கி

3. கூட்டுறவு அமைப்பில்

அ. ஒரு பங்கு ஒரு வாக்குமுறை கடைப்பிடிக்கப்படுகிறது

ஆ. ஒரு நபர் ஒரு வாக்குமுறை கடைப்பிடிக்கப்படுகிறது

இ. ஒரு நபருக்கு இருவாக்குரிமைகள் உண்டு

ஈ. பங்குகள் மாற்றியல்புத்தன்மை கொண்டவை

4 தனியாள் வணிக அமைப்பிற்கு ஏற்ற தொழில்கள்

அ. பேரளவு வியாபாரம்

ஆ. நடுத்தர வியாபாரம்

இ. சிற்றளவு வியாபாரம்

ஈ. வரையறையுள்ள வியாபாரம்

5. ------------- வணிகத்தின் மன்னர்களாக மதிக்கப்படுகிறார்கள்

அ. நுகர்வோர்கள்

ஆ. உற்பத்தியாளர்கள்

இ.  விற்பனையாளர்கள்

ஈ.  இடைநிலையர்கள்

6. தனியாள் வணிகரின் பொறுப்பு

அ. முதலுக்கு ஏற்ப வரையறுக்கப்பட்டது.

ஆ. சொத்துக்கு ஏற்ப வரையறுக்கப்பட்டது.

இ.  வரையறையில்லாதது

ஈ.  மேற்கூறிய அனைத்தும்

7. கூட்டாண்மை நிறுவனம் பதிவு செய்தல்

அ. 1949 சட்டம்

ஆ. 1956 சட்டம்

இ. 1932 சட்டம்

ஈ. 1912 சட்டம்

8. கூட்டாண்மை உண்டாக்கப்படுவது

அ. ஒப்பந்தத்தால்

ஆ. கூட்டாளிகளுக்கிடையேயுள்ள உறவால்

இ. அரசின் வழிகாட்டலால்

ஈ. மேற்கூறிய  அனைத்தும்

9. -------- என்பது தற்காலிகமாக ஏற்படுத்தப்பட்ட ஒரு கூட்டாண்மையாகும்.

அ. வரையறுத்த கூட்டாண்மை

ஆ. குறிப்பிட்ட கூட்டாண்மை

இ. இணைவினை

ஈ. விருப்பமுறிக் கூட்டாண்மை

10 தனி வரையறு நிறுமத்தில் குறைந்தது ---------- இயக்குநர்களாவது இருக்க வேண்டும்

அ. இரண்டு

ஆ. மூன்று

இ. ஐந்து

ஈ. ஒன்று

11. ஒரு நிறுவனத்தின் அகமேலாண்மை குறித்த விவரங்கள் அடங்கியிருப்பது

அ. செயல்முறை விதிகள்

ஆ. அமைப்பு முறைஏடு

இ. தகவலறிக்கை

ஈ. கடனீட்டுப் பத்திரங்கள்

12. தகவலறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கும் குறைந்தளவு பங்கெடுப்பைக் கீழ்க்காணும் நாட்களுக்குள் ஒரு பொது நிறுமம் பெறவேண்டும்

அ. 90 நாட்களுக்குள்

ஆ. 80 நாட்களுக்குள்

இ. 70 நாட்களுக்குள்

ஈ. 60 நாட்களுக்குள்

13. இரு ஆண்டுப் பொதுக்கூட்டங்களுக்கு இடையே உள்ள கால இடைவெளி------------

அ. 15 மாதங்கள்

ஆ. 6 மாதங்கள்

இ. 7 மாதங்கள்

ஈ. 2 மாதங்கள்

14 சிறப்புப் பொதுக்கூட்டத்தை (அசாதாரண பொதுக் கூட்டத்தை) யார் கூட்டலாம்?

அ. நிறுமச் சட்டத் தீர்ப்பாயம்

ஆ. இயக்குநர் அவை தானே முன்வந்து அல்லது உறுப்பினர்கள் வேண்டுகோளை ஏற்று

இ. இயக்குநர் அவை கூட்டத் தவறும் பொழுது வேண்டுகோள் விடுத்தோராலேயே

ஈ. மேற்சொன்ன அனைவராலும்

15 சபையில் தலைவருடன் சேர்ந்து செபியில் இவ்வளவு உறுப்பினர்கள் உள்ளனர்.

அ. 5

ஆ. 7

இ. 6

ஈ. 8

16 கரடி ஊகவணிகர் ------------------ என்று அழைக்கப்படுகிறார்.

அ. தெஜிவாலா

ஆ. மண்டிவாலா

இ.முனைமவேட்டையாளர்

ஈ. மேற்கூறிய அனைத்தும்

17 பங்குமாற்றகம் பங்குகளின் ஊகவணிகத்தை

அ. அனுமதிப்பதில்லை

ஆ. ஊக்கப்படுத்துவதில்லை

இ. ஊக்கப்படுத்துகிறது

ஈ. தடைசெய்யும்

18 கூட்டுறவில் குறைந்த பட்ச உறுப்பினர்கள் எண்ணிக்கை

அ. 2

ஆ. 7

இ. 10

ஈ. 25

19 மத்தியக் கூட்டுறவு வங்கி தொடங்கப்படுவது-------------

அ. கிராமங்களில்

ஆ. மாவட்டத் தலைநகரங்களில்

இ. மாநிலத் தலைநகரங்களில்

ஈ. நகர்ப்புறங்களில்

20 அரசுத் தொழில்கள் மிகச் செம்மையாக இயங்குவதற்கு மிகவும் உகந்தது எனப் பொது வாகக்கருதப்படும் வடிவமைப்பு

அ. துறைவாரி அமைப்பு

ஆ. பொதுக் கழகம்

இ. அரசு நிறுமம்

ஈ. கூட்டுப் பங்கு நிறுமம்

**பகுதி ஆ**

**எவையேனும் ஏழு வினாக்களுக்கு மட்டும் விடையளி** **7 X 2 = 14**

**21-வது வினாவிற்குக் கட்டாயம் விடையளிக்க வேண்டும்**

21 வாரிய அமைப்பிற்கு எடுத்துக்காட்டுகள் தருக.

22 தனியாள் வணிகரின் பொறுப்பு எத்தகையது? அதனை விவரி.

23 உழையா கூட்டாளி என்பவர் யார்?

24 பங்கு முனைமம் என்றால் என்ன?

25 வாக்கெடுப்பு எவ்வாறு நடத்தப்பெறலாம்?

26 போல்ட்டின் ஆற்றல்கள் யாவை? (ஏதேனும் இரண்டு)

27 கூட்டுறவு அமைப்பின் ஏதேனும் இரண்டு குறைபாடுகளைக் கூறுக.

28 அரசுத் தொழில்களை எவ்வகையில் உருவாக்கலாம் ?

29 இணைவினை என்பது என்ன?

30 மேலாண்மை இயக்குநர் நியமிக்கப்படும் வழிகளைக் கூறுக

**பகுதி – இ**

**எவையேனும் ஏழுவினாக்களுக்கு மட்டும் விடையளி** **7 X 3 = 21**

**31-வது வினாவிற்குக் கட்டாயம் விடையளிக்க வேண்டும்**

31 இந்துக் கூட்டுக்குடும்ப வணிக அமைப்புப் பற்றிக் குறிப்பு வரைக.

32 தனியாள் வணிகத்தால் சமுதாயத்திற்கு விளையும் நன்மைகள் மூன்றினைக் கூறுக.

33 கூட்டாண்மை ஒப்பாவணத்திலுள்ள பொருளடக்கங்கள் யாவை? (ஏதேனும் ஆறு)

34 பிடிப்பு – துணை நிறுமம் என்றால் என்ன?

35 பகராள் என்பவர் யார்? அவருக்குரிய உரிமை என்ன? (ஏதேனும் இரண்டு )

36 பரஸ்பரநிதி யாருக்கு ஏற்றது? ஏன்?

37 கூட்டுறவுப் பண்டகசாலை பற்றி எழுதுக

38. பொதுத்துறை – தனியார் துறை வேறுபடுத்துக. (ஏதேனும் மூன்று)

39 வரையறு கூட்டாளி – பொதுக் கூட்டாளி வேறுபடுத்துக.

40 ஏதேனும் மூன்று ஊகவணிகர்களைப் பற்றி எழுதுக

**பகுதி – ஈ**

**அனைத்து வினாக்களுக்கும் விடையளி** **7 X 5 = 35**

41 ஏதேனும் ஐந்து தொழிலமைப்புகள் பற்றிச் சுருக்கமாக எழுதுக.

(அல்லது)

இந்தியாவில் கூட்டுறவு இயக்கம் தோற்றம் பற்றிச் சுருக்கமாக எழுதுக.

42 தனியாள் வணிக அமைப்பின் தன்மைகள் ஐந்தினை விளக்குக.

(அல்லது)

கூட்டாளிகள் உரிமைகள், கடமைகள் யாவை? (ஒவ்வொன்றிலும் ஏதேனும் ஐந்து)

43 பொறுப்புகளின் அடிப்படையில் நிறுமங்கள் எவ்வாறு வகைப்படுத்தப்பட்டுள்ளன? விளக்குக.

(அல்லது)

நிறுமச் செயலரின் முக்கியத்துவங்கள் ஐந்தினை எழுதுக.

44 செபி அமைப்பின் பணிகளை எழுதுக .(ஏதேனும் ஐந்து)

(அல்லது)

தனியாள் வணிகத்தின் எல்லாக் குறைகளையும் கூட்டாண்மை களைகிறதா? விளக்குக.

45 மேலாண்மை இயக்குநர் - மேலாளர் வேறுபடுத்திக்காட்டுக.

(அல்லது)

ஒரு நல்ல அமைப்பின் தன்மைகளுள் ஐந்தினை மட்டும் விளக்குக.

46 கூட்டாளிகளின் வகைகள் யாவை? விளக்குக. (ஏதேனும் ஐந்து)

(அல்லது)

செயல்முறை விதிகளில் உள்ள ஏதேனும் பத்து உள்ளடக்கங்களை எழுதுக.

47 அதிக இடரை விரும்பாத முதலீட்டாளருக்கு ஏற்ற சேமிப்புமுறை எது? விளக்குக.

(அல்லது)

தொழில் துறையில் அரசு ஈடுபடுவதால் விளையும் நன்மைகளை எழுதுக.